## சுருக்கம்

செய்தி மக்கள் தொடர்புத் துறை – அரசுப்பொருட்காட்சி – 2014 டிசம்பர் –2015 ஜனவரி திங்களில் திருச்சியில் 45 நாட்களுக்கு அரசுப் பொருட்காட்சி நடத்துதல் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் அரங்கு அமைக்க அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

### மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஆர்–2) துறை

அரசாணை (ப) எண்.90

நாள்:23.01.2015
ஜய, தை – 9
திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்க

அரசாணை (நிலை) எண்.179, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (பொருட்காட்சி) துறை, நாள். 11.11.2014.

•••••

ஆணை:

மேலே படிக்கப்பட்ட அரசாணையில் 2014–2015–ஆம் ஆண்டில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பாக திருச்சியில் டிசம்பர் 2014 முதல் ஜனவரி 2015 வரை 45 நாட்கள் அரசு பொருட்காட்சி நடத்த துறை வாரியாக நிதி ஒதுக்கீடு ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆணையில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறைக்கு ரூ.60,000/– (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

2. இதனை அரசு கவனமாக ஆராய்ந்து மக்கள் நல்வாழ்வு மற்றம் குடும்ப நலத்துறைக்கு ரூ.60,000/– (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. தமிழ்நாடு நிதி விதி தொகுப்பு பகுதி 1–ல், விதி 99ன் படி மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை குடும்ப நல இயக்குநர் (பொ) முன்பணமாக கருவூலத்திலிருந்து பெறுவதற்கும் அதனை உரிய விரிவான பட்டியல் மற்றும் செலவு சீட்டுகளை சமர்ப்பித்து அதனைத் தீர்வு செய்வதற்கும் அரசு அனுமதி வழங்குகிறது.

3. இச்செலவினங்கள் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

2211.00 குடும்ப நலன் 001 நெறிப்படுத்தவும் நிர்வாகமும் 1 திட்டத்தில் சேராதது AB குடும்ப நல இயக்கநரின் கட்டுப்பாட்டில் நடத்தப்படும் அரசு பொருட்காட்சி 08 விளம்பரமும் பிரச்சாரமும் 02 பொருட்காட்சி (DP Code 2211 00 001 AB 0829)

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.ராதாகிருஷ்ணன்
அரசு செயலாளர்

பெறுநர்
குடும்ப நலத் துறை இயக்குநர் (பொ), சென்னை–600 006.
துணை இயக்குநர், ஊரக நலப்பணிகள், திருச்சிராப்பள்ளி.

மாவட்ட கருவூல அலுவலர், திருச்சிராப்பள்ளி
மாநில கணக்காய்வு தலைவர், சென்னை-18/35.
சம்பள கணக்கு அலுவலர், சென்ன்ன–35.

<u>நகல்</u>

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (பொருட்காட்சித்) துறை, சென்னை–9.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (தகவு பிரிவு) துறை, சென்னை–9.
இ.கோ / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

27/01/15

பிரிவு அலுவலர்

27.1.15